# NFTE-தமிழ் மாநில சங்கம்

## VRS குறித்து MOC க்கு BSNL ன் முன்வைப்புகள்
## ( நமது பார்வையுடன்)

BSNLல் ஊழியர் செலவு வருவாயில் 46.5 சதமாகவுள்ளது. ஊழியரின் சராசரி வயது 49. தற்போதுள்ள (22-8-2011) மொத்த ஊழியர்கள் 2,76,306. குரூப் ஏ- 7705, பி-47314, சி-180389, டி-38579 பிற-2319.

சாம்பிட்ரோடா கமிட்டி, BRPSE ஆகியவை VRS குறித்த பரிந்துரைகளை தந்துள்ளன. போட்டிகம்பெனிகளின் ஊழியர் எண்ணிக்கையை தெரிந்து கொள்ளவேண்டும். ஆனால் நேரடி ஒப்பீடு சாத்தியமல்ல. ஏர்டெல் அனத்து வேலைகளையும் அவுட் சோர்சிங் விடுகிறது . அங்கு ஊழியர் 25000- அவுட் சோர்சிங்கில் 20000 என்றால் 10 லட்சம் இணப்புகளுக்கு 261 ஊழியர் உள்ளனர். உலகத்தரம் வாய்ந்த டாய்ட்ச், பிரிட்டிஷ் டெலிகாம், டெல்ஸ்ட்ராவில் 1000 இணைப்புகளுக்கு 2.82, 4.13, 2.82 என்ற அளவில் FL ஊழியர் உள்ளனர். BSNL ல் IT, Sales Mktg, வாடிக்கையாளர் நலன் போன்றவைகளுக்கு போட்டி சூழலில் தேவைப்படும் திறமை வாய்ந்த ஊழியர் இல்லை. எனவே திறமையான இளம் வயதினரை எடுத்திட வேண்டும் என்று பிட்ரோடா வழிகாட்டியுள்ளார்.

புதிய வர்த்தக நடைமுறைகளை BSNL மேற்கொள்ளும்போது 175103 ஊழியரே தேவை. FL பகுதிக்கு 1,34,014 (U-79355 R-54659), WLL பகுதிக்கு 2649, CMTS பகுதிக்கு 38441 (U-23251 R-15190) என்று இருந்தால் போதும்.

மேற்கூறிய அம்சங்களை கணக்கில் கொண்டும் BSNL புத்தாக்கத்திற்கும் 1 லட்சம் ஊழியர்களுக்கு VRS கொடுத்திட முன் மொழிவுகளை BSNL செய்கிறது.

DPEன் வழிகாட்டுதல்கள் 60 நாட்கள் திட்டம், குஜராத் 35 மற்றும் 25 நாட்கள் திட்டம் ஆகியவற்றின் படி தேவைப்படும் நிதிச் செலவு குறித்து கணக்கீடுகளை BSNL தருகிறது. 45 வயதிற்கு மேற்பட்டோர் அனவருக்கும் திட்டம் பொருந்தும்.

60 நாட்கள் திட்டத்தில் 50 வயதுள்ள VRS விருப்பதாரருக்கு NE1 ஊதியத்தில் ஓய்வூதிய பலன்களையும் சேர்த்து 13,47,138 கிடைக்கும். இதில் VRS ஈடு 7,67,648. NE11 விருப்பதாரருக்கு 2846,362- VRS ஈடு 16,19,200. இதேபோல் ஒவ்வொரு ஊதிய நிலைக்கும் உத்தேச ஈட்டுக் கணக்கீடு தரப்பட்டுள்ளது.

இந்தப் பணத்தை வைத்துக்கொண்டு ஊழியர்கள் தங்கள் கனவுகளை தேவைகளை எவ்வாறெல்லாம் நிறைவேற்றிக் கொள்ளலாம் என நிர்வாகம் பட்டியலிடுகிறது. முன் கூட்டியே ஓய்வில் செல்வதால் 75 வயதுவரை காத்திருந்து ஓய்வூதியர் பெறும் கம்யூடேஷன் மீட்பை முன்னரே பெறலாம்.

60 நாட்கள் திட்டமெனில் VRS ஈட்டிற்கு 11276 கோடி தேவை. உடனடி ஓய்வூதிய பலன்களை சேர்த்தால் 18097 கோடி செலவாகும். ஆனால் 1 லட்சம் ஊழியரை முன்கூட்டியே VRSல் அனுப்புவதால் அடுத்து வருகிற 15 ஆண்டுகளில் 35,266 கோடி சம்பள மிச்சமாகும். அடுத்த 8 ஆண்டுகளில் 27076 கோடி மிச்சமாகும்.

குஜராத் திட்டத்தில் VRS ஈட்டிற்கு 8655 கோடி தேவை. உடனடி ஓய்வூதிய பலன்களை சேர்த்தால் 15476 கோடி தேவை. இத்திட்டத்திலும் அதே 35266 கோடி 15 ஆண்டுகளில் சம்பள மிச்சமாகும்.

VRS ஈட்டிற்கு தேவைப்படும் 11276 கோடியை அரசாங்கம் வட்டியின்றி கடனாக தந்துதவ வேண்டும் என வேண்டி நிற்கிறது BSNL. முன்கூட்டியே லட்சம் ஊழியர் பணி ஓய்வில் செல்வதால் கூடுதல் ஓய்வூதிய செலவையும் அரசாங்கமே ஏற்க வேண்டும் என வேண்டியுள்ளது .

நமது பார்வையில்...

தொழிற்சங்கம் என்ற வகையில் VRS எனும் ஆட்குறைப்பு திட்டம் குறித்து நாம் பலமுறை எழுதியுள்ளோம். கவர்ச்சிகரமான பல லகரங்களை பார்த்து ஊழியர்கள் மயங்கலாம். வந்தால் போட்டிபோட்டுக் கொண்டு விருப்பமும் கொடுக்கலாம். VRSல் சென்றவர்களின் கதைகளை நாம் வெளியிட்டு இருக்கிறோம். அனைவரும் சொத்து வாங்கி விடவில்லை. விட்டில் பூச்சிகளானோம் என வாழ்க்கை நொந்தவர்கள் பலர்.

**BSNL முன் வைப்புகளில் ஏராள சந்தேகங்கள் எழுகிறது.**

- 2012 மார்ச்சிற்குள் லட்சம் ஊழியரை அனுப்பினால் ஊதிய மிச்சமாக 2012-13க்கு BSNL காட்டுவது 3779 கோடி. இந்த மிச்சத்தால் நட்டம் குறையலாமே தவிர இலாபம் வந்து விடுமா- (வருவாய் பெருகாமல்)? VRS தந்துவிட்டால் இலாபம் என்ற உத்தரவாதத்தை தராதது ஏன்?
- லட்சம் ஊழியரை அனுப்பினால் age profile 49 என்பது என்னவாக குறையும். திறமைக் கூட்டிட (Skill set) பொருத்தமான ஆளெடுப்பு என்கிறது BSNL. ஆண்டிற்கு எவ்வளவு புதிய ஊழியர்களை எடுக்கப் போகிறது. அதற்கு ஆகும் ஊதிய செலவை ஏன் சொல்லவில்லை. புதிய ஊழியர்களை எடுக்கப்போகிறோம் என்றால் சம்பளம் மிச்சம் என்பது எப்படி வரும்? DPE வழிகாட்டுதல்படி VRSல் காலியாகும் இடங்கள் ஒழிக்கப்படுமே தவிர அதற்கு ஆளெடுக்க முடியாது. எனவே இருக்கிற திறமையையும் இழந்துவிட்டு புதிய திறமையையும் அடையாமல் மேலும் BSNL வீழுமே என்ற நமது கவலை நியாயமான ஒன்றே

".12. In implementing the VRS scheme, managements shall ensure that it is extended primarily to such employees whose services may be dispensed without detriment to the company. Care will be exercised to ensure that highly skilled and qualified workers and staff are not given the option. As there shall be no recruitment against vacancies arising due to VRS – it is important that the organization is not

denuded of talent. The managements of the PSUs shall introduce the VRS with the approval of their Boards and the administrative Ministries."

- DOT யிடம் / அரசாங்கத்திடம் BSNL 11276 கோடி வட்டியில்லா கடனாக (VRS ஈட்டிற்கு) கோருகிறது. DPE வழிகாட்டுதல்படி வங்கி கடன் கிடைக்குமா என்பது முதலில் முயற்சிக்கப் படவேண்டும்.

" 8. Budgetary support will be provided to the marginally profit or loss making enterprises and to the sick enterprises for implementing VRS only in case bank credit is not available. The funds would normally be made available at the beginning of the financial year. However, before seeking budgetary support in cases of unviable/sick PSUs other sources of funding should be fully explored such as asset securitization and bank loans against Government guarantee for funding VRS/VSS."

தான் தராத 7500 கோடிக்கு BSNLயிடமிருந்து 14.5 சதம் கந்து வட்டி பெற்று வருகிறது அரசாங்கம். கபில்சிபல் 2.5 சதம் வட்டியை குறைக்கமுடியுமா என்று கேட்டதற்கு பரிசீலிக்கமுடியாது என்று blunt ஆக பதிலை தந்தார் நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி.

3. I may also mention that BSNL has adequately been compensated since its inception in the form of dividend relief as well as moratorium on the repayment of principal and interest on the notional loan. Re-imbursement of licence fees and spectrum charges have also been provided as compensation to BSNL towards meeting the operational losses in rural and village public telephony, etc. Further, the pension liability in respect of employees who were absorbed in BSNL is borne entirely by the Government. The actual expenditure on the pensionary liabilities amounted to ₹ 2893.82 crore in 2009-10, while an amount of ₹ 3700 crore in RE 2010-11 and ₹ 3950 crore in BE 2011-12 respectively have been provisioned. BSNL on its part has in fact defaulted on dividend payment to the General Revenues for the year 2008-09, despite being in profit and carrying huge Reserves and Surplus.

அரசாங்கம் 11276 கோடியளவு பெருந்தொகையை கடனாக தருமா அதுவும் வட்டியின்றி தருமா என்பது பெரும் கேள்விக்குறி தான். அப்படி வட்டியோடு அரசாங்கமோ /

வங்கியோ தந்தால் 12 சத வட்டி என்றால் கூட வட்டி மட்டுமே ஆண்டிற்கு 1400 கோடியாகும். Salary Head என்பதிலிருந்து Interest Head என்பதற்கு செலவு கணக்கு மாறும் அவ்வளவுதான். இதுவரை கடன் பொறியில் சிக்காமல் தாக்குப் பிடித்து வருகிறது BSNL.

- லட்சம் ஊழியர் VRS ஆல் DOTக்கு/ அரசாங்கத்திற்கு திடிரென பென்ஷன் செலவு பெருமளவு உயரும். BSNLயிடமிருந்து லட்சம் ஊழியர்களுக்காக DOTக்கு போய்சேர வேண்டிய pension contribution as per FR நின்று போகும். இந்த புதிய சுமையை முழுமையாக DOT/அரசாங்கம் ஏற்குமா என்பதும் அய்யத்திற்குரிய ஒன்றே,. சுமையை BSNLலும் ஏற்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டால் லட்சம் ஊழியர்களுக்கான pension contribution as per FR என்ற அளவிற்கு இருந்தால் கூட என்ன மிச்சமாகும். ஆனால் 2006 உத்தரவு(60%) தலைக்குமேல் கத்தியாக இன்றும் தொங்கிக் கொண்டுதான் இருக்கிறது.

- அனத்திற்கும் மேலாக மீதியிருக்கக் கூடிய 1,70,000 ஊழியர்களின் Post-VRS Situation தான் தொழிற்சங்கங்களுக்கு சவால் நிறைந்ததாக இருக்கும்.எவ்வித பலனுமின்றி VRSல் ஈடு வாங்கிச் சென்றவரின் கூடுதல் வேலைப் பளுவை சுமக்க வேண்டியிருக்கும்.. கூடுதலாக வரும் மாற்றல்களை எதிர் கொள்ள வேண்டிவரும். எனவே Post-VRS Situation எதிர் கொள்வதற்கான Strategyயை அலட்சியப்படுத்தாத VRS எதிர்ப்பு இயக்கங்கள் அனைத்து சங்க ஒற்றுமை வடிவத்தில்- முடிந்தால் மனந்திறந்த கலந்துரையாடல்களுக்குப் பின்னர் ஒரே குறிப்புடன் முன்னெடுத்து செல்லப்படவேண்டும்.

17-9-11